# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018–ம் வருடம் அக்டோபர் மாதம் 22–ம் தேதி திஙகட் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரஙகள் பின்வருமாறு.

## பொருட்கள்

# பத்மனாபபுரம் நகராட்சி

## நகர் மன்ற தீர்மானம் எண்.1361, நாள் 22–10–2018–ன் நகல்.

**1)** நகராட்சிகளில் **01.04.2018** அரையாண்டு முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.**73**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நிதி IV) துறை நாள்.**19.07.2018–ன்** படி கீழ்கண்டுள்ள விபரப்படியாக சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளஉத்தரவிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50 % மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100 % மிகாமல் |

அரசாணை எண்.**76**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நிதி IV) துறை நாள்.**30.07.2018–ன்** படி மேற்படி வரிசை எண்.**2–ல்** உள்ள வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு **100** % மிகாமல் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் என்பதனை நீக்கறவு செய்து கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்களுக்கு | 50 % மிகாமலும், |
| 2 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | 100% மிகாமலும் |

பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **20555/2018/ஆர்1**, நாள். **20.08.2018** மற்றும் வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டுமெனவும், மேலும் சொத்துவரி விதிப்பு நியாயமானதாகவும், முறையானதாகவும், ஏற்றத்தாழ்வுகள் அற்றதும், வெளிப்படை தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டுமெனவும் இப்புதிய முறை சொத்துக்கள் அமைந்துள்ள பகுதிகளின் வாடகை அடிப்படையில் அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து மண்டல அடிப்படை மதிப்பை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**4314/93/ஆர்1**, நாள்.**11.01.93–ன்** படி மாற்றியமைத்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.**1375/2018/அ2**, நாள்.**24.08.2018–ன்** படி பொது சொத்துவரி நிர்ணயம் செய்ய நியமிக்கப்பட்ட குழு சமர்பித்த அறிக்கையின்படி கீழ்கண்ட விபரப்படியாக மண்டல அடிப்படை மதிப்பில் சிறிது உயர்வு செய்தும், மண்டலத்தினை மாற்றியமைத்தும் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

<u>அடிப்படை மண்டல மதிப்பு –</u>

| மண்டலஙகள் | ஏற்கெனவே உள்ள அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) | தற்பொழுது நிர்ணயம் செய்யும் அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) |
|---|---|---|
| A | ரூ.1.00 | ரூ.2.20 |
| B | ரூ.0.65 | ரூ.1.30 |

மண்டலங்கள்–

| வார்டு எண் | தெரு எண் | தெரு பெயர் | பிளாக் எண் | 01.04.2008 பொது சொத்துவரி சீராய்வின் போது நிர்ணயிக்கப் பட்ட மண்டலம் | 01.04.2018 பொது சொத்துவரி சீராய்வின்படி தற்போது மாற்றியமைக்கப்படும் மண்டலம் |
|---|---|---|---|---|---|
| **1** | 1 | மணலி | **28** | **B** | **A** |
| | | | **30** | **B** | **B** |
| **2** | 2 | பத்மனாபபுரம் | **36-37(1 to 59)** | **B** | **B** |
| | | | | | |
| **3** | 3 | இராமசுவாமி கோவில் | **37 ( 60 to end)** | **B** | **B** |
| | | | **38** | **B** | **B** |
| **4** | 4 | நீலகண்டசுவாமி கோவில் | **32, 33** | **B** | **B** |
| **5** | 5 | பேலஸ் | **34,35** | **B** | **B** |
| **6** | 6 | அம்மன்கோவில் | **21** | **A** | **A** |
| | | | **27** | **B** | **A** |
| **7** | 7 | அஞ்சுவண்ணம் | **25** | **B** | **B** |
| | | | **26( 1 to 69)** | **B** | **A** |
| **8** | 8 | சாரோடு | **26(70 to end)** | **B** | **A** |
| | | | **31** | **B** | **B** |
| **9** | 9 | மருத்துவமனை | **23** | **A** | **A** |
| | | | **29** | **B** | **A** |
| **10** | 10 | பள்ளி | **22, 24** | **A** | **A** |
| **11** | 11 | மேட்டுக்கடை | **14, 20** | **A** | **A** |
| **12** | 12 | மார்க்கெட் | **16,19** | **A** | **A** |
| **13** | 13 | நகராட்சி அலுவலகம் | **15, 18** | **A** | **A** |
| **14** | 14 | சிறுகடை | **8(52 to 100)** | **B** | **B** |
| | | | **9** | **B** | **B** |
| **15** | 15 | பேருந்து நிலையம் | **13,17** | **A** | **A** |
| **16** | 16 | கச்சேரி | **11,12** | **A** | **A** |
| **17** | 17 | கொல்லன்விளை | **7** | **B** | **A** |
| | | | **10** | **A** | **A** |
| **18** | 18 | புலியூர்குறிச்சி | **4(1 to 49)** | **B** | **A** |
| | | | **6, 8 (1 to 51)** | **B** | **A** |
| **19** | 19 | உதயகிரி | **5** | **B** | **A** |
| **20** | 20 | ஆசான் கிணறு | **2** | **B** | **B** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3 | B | B |
| | | | 4(50 to end) | B | A |
| 21 | 21 | குமாரகோவில் | 1, 2 | B | B |

சிறப்பு இன கட்டிடஙகளுக்கான நட்சத்திர ஹோட்டல், வணிக வளாகஙகள், குளிர்சாதன வசதியுள்ள திருமண மண்டபஙகள், சிறப்பு தனி மருத்துவமனைகள், மல்டிப்ளக்ஸ் ஆகியவற்றிற்கு அடிப்படை மண்டல மதிப்பு அனைத்து வார்டுகளுக்கும் A மண்டலத்தில் நிர்ணயம் செய்வதற்கும், அரசின் ஆணை மற்றும் வழிகாட்டுதலில் வழஙகப்பட்டுள்ள கட்டிடத்திற்கான தள்ளுபடி மற்றும் சலுகைகள் அடிப்படையில் **01.04.2018** முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அஙகீகாரத்திற்காக பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்ற தீர்மானம் எண்:**1344**, நாள்.**07.09.2018**–இன் படி அஙகீகாரம் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி நகர்மன்ற தீர்மானத்தினை **13.09.2018** அன்றைய தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட வரிவிதிப்பாளர்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட **30** தினஙகளுக்குள் நேரிலோ, தபால் மூலமாகவோ மற்றும் இணையதள முகவரியில் பத்மனாபபுரம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பலாம் என சொத்துவரி திருத்த அறிக்கை வெளியிடப்பட்டது

மேற்படி சொத்துவரி திருத்த அறிக்கை வெளியிடப்பட்டதினை ஆட்சேபித்து **11–10–2018** தேதி பத்மனாபபுரம் நகராட்சி பொது மக்கள் சார்பாக ஒரே ஒரு ஆட்சேபனை மனு வரப் பெற்றது. மேற்படி ஆட்சேபனை மனுவில் சொத்துவரி உயர்வு அரசாணைக்கு எதிராக மட்டுமல்லாமல் பொது மக்களின் உரிமையை பாதிக்கும் வகையில் உள்ளதாகவும் தற்போதைய அன்றாட வாழ்வாதார தேவையான பொருட்களின் விலையேற்றத்தால் பொது மக்கள் திணறுவதால் சொத்துவரி தொடர்பான அறிக்கை ஏற்கதக்கதல்ல எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்நகராட்சி பல்வேறு சுற்றுலா தலஙகளையும், வழிபாட்டு தலஙகளையும் உள்ளடஙகி வளர்ச்சி அடைந்து வரும் நகராட்சி ஆகும். மேலும் மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் அபிவிருத்தி பணிகள் , சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்தல், மழைநீர் வடிகால் அமைத்து கொடுத்தல், துப்புரவு பணி மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு நகராட்சியில் செய்து கொடுக்கப்பட வேண்டியது உள்ளதாலும் நிதி நிலையினை கருத்தில் கொண்டு **11–10–2018**–ம் தியதி கிடைக்கப் பெற்ற ஒரே ஒரு ஆட்சேபனை விண்ணபத்தை நிராகரித்து நகர் மன்ற தீர்மானம் எண்.**1344**, நாள் **07–09–2018**–ன் படி ஏற்கனவே உள்ள **2** (இரண்டு) மண்டலஙகளின் மதிப்பு மற்றும் மண்டலஙகள் மாற்றம் செய்து இயற்றப்பட்ட தீர்மானத்தினை உறுதி செய்து **01–04–2018** முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1375/2018/அ2)

<u>மன்றத் தீர்மானம் எண்.1361, நாள்22–10–2018.</u>

அனுமதிக்கப்பட்டது.

---

2)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெஙகு கொசுக்களால் பரவும் டெஙகு நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டு வீடு வீடாக சென்று கண்காணிக்கவும் கொசுக்களின் வாழ்வாதாரஙகளை அழிக்கவும் **15** தினக்கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் ஆகியோர்களின் அறிவுறுத்தலின் படியும் **15** தினக்கூலி

பணியாளர்களுக்கு 01–08–2018 முதல் மேலும் 89 நாட்களுக்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் அதே பணியாளர்களை தொடர்ந்து பணியமர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் அதற்கான செலவு தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மேற்படி தொகை உத்தேசமாக ரூ.150000/–ஐ பொது நிதியில் இருந்து வழஙகலாம்.

(ந.க.எண். 3827/2018/அ2)

**மன்றத் தீர்மானம் எண்.1362**

அனுமதிக்கப்பட்டது.

3)இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN74W-0436-க்கு பழுது பணிகள் மேற்கொள்ள 05–10–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | K.S.S.S. ஆட்டோமொபைல்ஸ்<br>நாகர்கோவில் | 37410/– |
| 2. | A.R.K. ஆட்டோமொபைல்ஸ்<br>நாகர்கோவில் | 36400/– |

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2–ல் உள்ள A.R.K. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த A.R.K. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழஙகியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு– மன்ற அனுமதி வழஙகலாம்
(2897/2009/அ2)

**மன்றத் தீர்மானம் எண்.1363**

அனுமதிக்கப்பட்டது.

4) இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார பிரிவில் இயஙகும் வாகனம் எண். TN74Z-2536-க்கு 2018–ம் ஆண்டிற்கு தகுதி சான்று புதுப்பித்து கொள்வதற்கான மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ. 1,00,000/–ஆகும். மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.13502/2016/அ2)

**மன்றத் தீர்மானம் எண்.1364**

அனுமதிக்கப்பட்டது.

**5)**பத்மனாபபுரம் நகராட்சி சார்பாக பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா **22–09–2018** அன்று நடைபெறுவதை முன்னிட்டு '**10** x **8**' என்ற அளவில் துணியால் தயாரிக்கப்பட்ட விளம்பர பலகை **6** எண்ணம் தயாரித்து நிறுவிட **19–09–2018** அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | நிறுவனம் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| **1.** | Hameedheen<br>Printers<br>Madurai | **2240/–** |
| **2.** | Alamelu Printing Press & Screen<br>Madurai | **2350/–** |
| **3.** | Devan Off set Printers<br>Madurai. | **2300/–** |

மேற்படி வரப்பெற்ற **3** விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Hameedheen Printers, Madurai என்ற நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண்.1696/2018/இ1)**

**<u>மன்றத் தீர்மானம் எண்.1365</u>**

அனுமதிக்கப்பட்டது.

**6)**பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடஙகில் கழிவுகளை கொட்டுவதற்கு இடவசதி இல்லாமலும் வாகனஙகள் உள்ளே சென்று கழிவுகளை கொட்டுவதற்கும் போதிய சாலை வசதிகள் இல்லாமலும் மிகவும் சிரமமாக உள்ளதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் மூலம் அறிக்கை தரப்பட்டுள்ளது.

மேற்படி நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கையின்படி உரக்கிடஙகில் குவிந்துள்ள குப்பைகளை Bio-mining முறையில் அகற்றுவதற்கு ரூ. **21.60** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பின்பு குப்பைகளை ஒதுக்குவதற்கு மட்டும் ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட குப்பைகளை ஒதுக்கும் பணி மேற்கொள்ள பொதுப்பணித்துறை தரக்கட்டுப்பாடு விலை விகிதத்தின்படி **(2018–19)** ரூ.**2.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், தற்போது நகராட்சி நிதி நிலைமைகளை கருத்தில் கொண்டு ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி **20** மணி நேரம் JCB இயந்திரம் மூலம் குப்பைகளை ஒதுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தரக் கட்டுப்பாடு விலை விகிதம்படி **(2018–19)** மணிக்கு ரூ. **847/–** வீதம் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. என். ராமதாஸ் அவர்கள் மூலம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1319/2018/இ1)**

**<u>மன்றத் தீர்மானம் எண்.1366 நாள் 22–10–2018</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7)பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 ராமன்பரம்பு பிள்ளையார் கோவில் அருகில் உள்ள பண்டாரக்குளம் என்ற செட்டிகுளத்தில் படித்துறை மற்றும் பக்கச் சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ2/4230/2017 நாள் 10–18–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 0484/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1367</u>

அனுமதிக்கப்படுகிறது.

8) இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக அவசியமாக வெளியூர் செல்ல பயணப்படி 2018–2019–ம் ஆண்டிற்கு வழஙக உத்தேச செலவுத் தொகை ரூ. 4,00,000/– (ரூபாய் நான்கு லட்சம்)–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1566/2015/பி1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1368 நாள் 22–10–2018.</u>

அனுமதிக்கப்படுகிறது.

9)இந்நகராட்சி பொறியியல் பிரிவில் நான்கு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தற்போது பொது சுகாதார பிரிவிலிருந்து 2 நபர்களும் Out Sourcing மூலம் 1 நபரும் ஈடுபடுத்தப்படுகின்றனர். மேற்படி பணியில் ஈடுபடும் வேளையில் தக்கலை பேட்டை சந்தையில் தினசரி வசூல் செய்யவும், டெஙகு காய்ச்சல் தடுப்பு பணிக்கும் மேற்படி இரண்டு நபர்களை ஈடுபடுத்துவதால் குடிநீர் விநியோகம் பாதிப்பு நிலை ஏற்படுகிறது.

மேற்படி நான்கு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பிரிவிலிருந்து 2 நபர்களையும், Out sourcing மூலம் 2 நபர்களையும் நியமித்தால் தான் குடிநீர் விநியோகப் பணிகளில் தாமதமின்றி செய்ய நேரிடும். அதன்படி தற்போது கணணியில் முன் அனுபவமுள்ள ஒரு நபர் மன்றும் ஒரு குழாய் திருகி ஆகிய இரு நபர்கள் 01–11–2017 முதல் 31–03–2018 வரை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க இந்நகர் மன்ற தீர்மானம் எண்.1123, நாள் 31–10–2017–ன் படி ரூ.3,00,000 மதிப்பீடு தயார் செய்து அதற்கான ஒப்ந்தம் கோரப்பட்டு பணிகள் மேற்கொண்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி மதிப்பீடு தொகை ரூ.3,00,000/* முழுமையாக செலவாகாதா பட்சத்தில் ஒப்பந்தகாரர் நீட்டிப்பு செய்து தற்போது ஆகஸ்ட் 2018–ம் மாதம் வரை மொத்தம் ரூ.252616/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதி தொகை ரூ.47384 /– உள்ளது. மேற்படி தற்போது

M.C.C. TUB MLA & MP போன்ற திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஒப்பந்த அடிப்படையில் **01–11–2018** முதல் **31–10–2010** வரை கணனியில் முன் அனுபவம் வாய்ந்த ஒரு Technical Assistant (தொழில் நுட்ப உதவியாளர்) மற்றும் இரண்டு குழாய் திருகி நபர்களும் ஆகமொத்தம் மூன்று நபர்கள் நியமித்து ரூ.**4,40,000/–**க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீடு ரூ.**440000/–**ற்கு

**2018–19** PWD SOR- ன் படி தொழில் நுட்ப <u>உதவியாளர் நிலை – II</u>

ஊதிய விபரம் **–656** x 26 x 12 = 204672.00

2018-19 குழாய் திருகி **–2**

| | | |
|---|---|---|
| (Mazdoor II) | - 320 x 30 x12 = | 230400.00 |
| L.S. | | 4928.00 |
| Total | | 440000.00 |

மேற்படி மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ளவும், செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 1763/2017/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1369</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**10)**நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**1710/2018/**பி**1**, நாள் **10–08–2018–**ன் படியும், இந்நகர் மன்ற தீர்மானம் எண்.**1269**, நாள் **11–05–2018–**ன் அனுமதி வழஙகப்பட்டதன் படியும் , இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இல்லாத வகையில் உள்ள கீழ்க்கண்ட விபரப்படி சமுதாய கழிப்பிடஙகளை இடித்து அகற்றும் பணி ஒப்பந்தப்புள்ளி கோரபணி உத்திரவு வழஙகப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

1) இழுப்பகோணம் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடம்.
2) வாழவிளை கோட்டைச் சுவர் அருகாமையில் அமைந்துள்ள கழிப்பிடம்.
3) ஆர்.சி. தெருவில் சிறுகடை பகுதியில் ஆற்றின் கரை பக்கம் அமைந்துள்ள பழைய கழிப்பிடம்.

மேற்கண்ட கழிப்பறைகளில் மறு சுழற்சிக்கு பயன்படும் வகையில் உள்ள உலோக பொருள்களான இரும்பு கழிவுகள், கம்பிகள் மற்றும் பிளாஸ்டிக் ஆகியவைகளை உடனடியாக ஏலம் விடுவதற்கும், இந்நகராட்சியில் ஏற்கனவே குடோனில் உள்ள இரும்பு கம்பிகள், பழைய இரும்பு கதவுகள், இரும்பு கேட்டுகள் மற்றும் பழைய நகராட்சி அலுவலகமான டவுண்உறால் வளாகத்தில் உள்ள உபயோகமில்லாத (Fuse) மின் விளக்குகள் (Tube Light) சோக்குகள் ஆகியவற்றை ஏலமிட நகராட்சி பொறியாளர், பத்மனாபபுரம் நகராட்சி அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருட்களை ஏலமிட நேரடியாக விலைப்புள்ளிகள் பெறவும், அவசர அவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண்.1370**

அனுமதிக்கப்படுகிறது.

**11)**இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக கட்டப்படும் கட்டிடஙகளுக்கு கட்டிட அனுமதி Online முறையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசுக் கடிதம் எண் /**56189**/MA/2017-3 நாள் **18–09–2018–**ன் படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். **22660/2018**/டிபி4, நாள் **25–9–2018–**ம் நாளிட்ட சுற்றறிக்கையின்படி அனைத்து நகராட்சிகளுக்கு ஒரே மாதிரியான கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.**500/–** வசூலிக்கவும் மேலும் கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சமயத்தில் இணையவழி வாயிலாக செலுத்தும் வகையில் கணணியில் கணனி உதவி திட்ட அமைப்பாளர் வாயிலாக சில மாறுதல்கள் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.**806/2018**/ற்றி.பி.ஐ)

**மன்றத் தீர்மானம் எண்.1371**

அனுமதிக்கப்படுகிறது.

**12)**இந்நகராட்சிக்குட்பட்ட இரணியல் சாலை பகுதியில் பத்மனாபபுரம் நீதி மன்ற வளாக முன்புறம் (Pertrol pump) உள்ள இடமான நகரபுல எண். பி**8–180.9.750** சென்ட் நகரமனை இடம் உள்ளது. மேற்படி இடம் இந்நகராட்சிக்கு சொந்தமானதாகும். இவ்விடத்தினை தனி நபரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டு **22–10–2018** அன்று பிற்பகல் **2.00** மணியளவில் நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் (ம) நகராட்சி பணியாளர்களைக் கொண்டு மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்கப்பட்டது.

மேற்படி இடத்தில் அன்னியர்கள் யாரும் உள்ளே புகாத வண்ணம் அவ்விடத்தினை சுற்றி முள்வேலி அமைப்பதற்கும், விளம்பர பலகை வைப்பதற்கு ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட ஆக்கிரமிப்பு கட்டிடத்தினை சுற்றி முள்வேலி அமைப்பதற்கும், அறிவிப்பு பலகை வைப்பதற்கும் ரூ. **12,000/–**ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியில் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண்.

15–ன் கீழ் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரரான திரு. என். ராமதாஸ் என்பவரிடம் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.12,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 6190/2000/ற்றி.பி.ஐ)

<u>மன்றத் தீர்மானம் எண்.1372</u>

அனுமதிக்கப்படுகிறது.

13) இந்நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தையில் நகராட்சி பணியாளர்கள் மூலம் தினசரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தக்கலை பேட்டை சந்தையில் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் 30–10–2018–ஆம் தேதிய அறிவுரைப்படி தக்கலை பேட்டை சந்தை அம்மா உணவகம் முன்பு 9 எண்ணம் புதிய கடைகளும், மேல் நிலை நீர்த் தேக்க தொட்டியின் முன்பு 3 எண்ணம் கடைகளும், கழிப்பிடம் முன்புறம் 1 எண்ணம் (குடோன்) கடைகளும் மற்றும் ஆழ்துளை கிணறு முன்பு 5 எண்ணம் கடைகளும் மொத்தம் 18 எண்ணம் கடைகள் கட்டும் பணிக்கு

ரூ.7,25,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீட்டில் கடைகள் கட்டும் பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்யவும், செலவினத்தினை மேற்கண்ட கடைகளை Pre-auction செய்து அதன் முன்பணத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1901/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1373</u>

அனுமதிக்கப்படுகிறது.

14) பத்மநாபபுரம் நகராட்சி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் கடமையாகும். உள்ளூர் மக்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களின் தேவைகள்அத்தியாவசிய பணிகள் போன்றவற்றை சிறந்த நிதி நிர்வாகத்தின் மூலமே செம்மையாக செயல்படுதிட முடியும். நகராட்சியின் வரவினஙகளை பொறுத்தே செலவினஙகள் அமையும். மேலும், வரவினஙகளையும், வரவுகளையும் பெருக்குவதன்மூலம் உள்ளூர் மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தலாம். வரவினஙகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம். தொழில்வரி மற்றும் குத்தகை இனஙகள் போன்றவை அடஙகும்.

பொது மக்கள் வரியினஙகள் செலுத்துவதற்கு சுமை ஏற்படாமல், நகராட்சியின் வருவாயினை பெருக்குவது சிறந்த நிதி நிர்வாகம் ஆகும். எனவே, குத்தகை இனஙகளில் குத்தகை உரிமத்தின் மூலமாக நிதிஆதாரத்தினை பெருக்குவது சரியானதாகும். ஏனெனில் குத்தகை உரிமம் என்பது தேவை மற்றும் வெளிப்படை தன்மையின் காரணமாக எவருக்கும்

பாதிப்பில்லாமல் வருவாயினை பெருக்கும் ஒரு சிறந்த வழியாகும். எனவே நகராட்சி நிர்வாகத்தினை செம்மையாக நடத்துவதற்கும் சிறப்பாக நிர்வாகத்தினை கொண்டு செல்வதற்கும் குத்தகை உரிமங்களின் மூலம் சரியான, நியாயமான வருவாயினை ஈட்டும் பொருட்டு, தற்போது நகராட்சி நிர்வாகம் இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொது ஏலம் முறையினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக குத்தகை உரிம இனஙகளைதற்கால சந்தை மதிப்பிற்கு இணையாக உரிமம் பெறும் பொருட்டு(வாடகை) அரசு ஆணைகளுக்கு இணஙக பொது ஏலம் விடுவது நகராட்சிக்கு லாபகரமாக அமையும். இந்நிலையில் பத்மநாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி கடைகள், பெரும்பாலனவை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தனிநபர்களே குறைந்த உரிமத்தொகையில் அனுபவித்து வருகின்றனர். 2000ஆம் ஆண்டு அரசாணைஎண்.147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை நாள். 30.12.2000–ல் அறிவுறுத்தப்பட்டவாறு அஙகாடி மதிப்பு ஏதும் அப்போது நிர்ணயம் செய்யப்படாமல் முன்பிருந்த வாடகையில் 15% மட்டுமே உயர்த்தி மூன்றாண்டுகளுக்கு மீண்டும் உரிமம் புதுப்பித்து வழஙகப்பட்டுள்ளது.

மேலும் 2007ம் ஆண்டு அரசாணை எண். 92 நாள் 03/07/2007 வெளியிடப்பட்டது. அதற்கு பின்பு கடைகளுக்கு வாடகை அன்றைய சந்தை மதிப்பில் வாடகை மறுமதிப்பீடு செய்யப்படவில்லை. தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மட்டும் 15%உயர்வு செய்து இன்றுவரை குத்தகைதாரர்களால் வாடகை (மாத வாடகை தொகை) செலுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட அரசாணை தொடர்ந்து மூன்றாண்டு தொகுப்பு கால அளவாகக் கொண்டு மூன்றுமுறை மட்டுமே புதுப்பிக்கப்படவேண்டும். குத்தகை உரிமம் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு தற்பொழுது சந்தை மதிப்பில் வாடகை மதிப்பீடு செய்வது அல்லது பொது ஏலம் நடத்தி நியாயமான முறையில் அரசிற்கு சொந்தமான நகராட்சி கடைகளுக்கு உண்மையான மதிப்பினை பெறவேண்டியுள்ளது.

குத்தகை உரிமம் என்பது காலவரையறைக்குட்பட்டது. எனவே குத்தகையை தொடர்ந்து அனுபவிப்பது தவறாகும். மேலும் தொடர்ந்து ஒருவரே கடைகளை நடத்துவது குத்தகை விதிகளுக்கு முரண்பட்ட செயலாகும். குத்தகைதாரர் ஒன்பது ஆண்டுகள் குத்தகை உரிமம் முடிவுற்ற பின்பு கடையினை காலி செய்து விடவேண்டும், தஙகளது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என குத்தகை உரிமதாரர்கள் கூறுவது சட்டத்திற்கு புறம்பானதாகும். தொடர்ந்து தனிநபரே கடையினை அனுபவித்து வருவதன்மூலம் மற்றவர்களது சமவாய்ப்பினை தட்டிப்பறிப்பதாகும். இது குடிமக்களின் அடிப்படை உரிமையினை பாதிக்கும் செயலாகும். பொதுசொத்து என்பது அனைவருக்கும் பொதுவானது. அனைரும் பஙகேற்கும் வகையில் நியாயமான வெளிப்படையான முறையில் ஏலம் நடத்தப்படவேண்டும். இதன்மூலம் சமூகப்பொருளாதார நீதி நிலை நாட்டப்படும். அரசின் வருவாயினை பெருக்க போட்டி நிறைந்த சூழ்நிலையில் பொது ஏலம் நடத்துவது சரியானதாகும் .

தற்போது பத்மநாபபுரம் நகராட்சியில் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் அலுவலகப்பணிகள் மற்றும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுவதில் தொய்வு ஏற்படுகிறது. மேலும் பணியாளர்கள் ஊதியம் மற்றும் ஓய்வூதியம், செலவினஙள் அதிகமாக உள்ளதாலும், நகராட்சியில் நிதி பற்றாக்குறையின் காரணமாக நகராட்சி பணியாளர்களுக்கு மாத ஊதியம், அம்மா உணவக செலவினஙகள் குடிநீர் கட்டணம்

மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. நகராட்சி வருவாயினை பெருக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி காலிப்பணியிடஙகளை நிரப்பிக்கொள்ள அரசாணை எண்.1/2013ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி பல்வேறு திட்டஙகளுக்கு செலுத்தப்படவேண்டிய பஙகுத்தொகை மற்றும் நகராட்சி கடன் விபரஙகள் பின்வருமாறு உள்ளது.

| Sl.No. | Pending Details | Amountin Lakhs |
|---|---|---|
| 1. | Salary Deduction period from 4/2018 to 08/2018. | 48.37 |
| 2. | Stationary and printing Charges | 6.00 |
| 3. | E.B,.Dues | 32.23 |
| 4. | TWAD Board, Water Supply Charges. | 35.73 |
| 5. | General FundWorks | 210.55 |
| 6. | Scheme Work (ULB Contribution) | 64.36 |
| 7. | Deposit Refund | 74.00 |
| 8. | Survey Charges | 48.00 |
| | **வழஙகப்பட வேண்டிய நிலுவை தொகை மொத்தம்** | **519.24** |

மேலும், ஆணையர் அவர்களின் ஆய்வின் போது பல்வேறு கடைகள் உள்குத்தகைக்கு விடப்பட்டும், சில இடஙகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் இணைத்து ஒரே கடையாக நடத்தி வருவதாலும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவது கண்டறியப்பட்டது.

இந்நிலையில் புதிதாக ஏலம் நடத்தி சந்தை மதிப்பீட்டு தொகையில் வாடகை நிர்ணயம் செய்தால் நிர்ணயித்ததைவிட பல மடஙகு வருவாய் கூடுதலாக கிடைக்கும். எனவே நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு ஏலம் நடத்தப்பட்டு முடிவடைந்து **9** ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மறு ஏலம் விட மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும்.</u>

கடைகள் விவரம்

| வ. எண் | குத்தகை எல உரிமை விபரம் | ஏலம் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் கடைகளின் விபரம் | வைப்புத் தொகை இலட்சத்தில் ரூ. | மின்சார வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | தக்கலை காமராஜர் பேருந்துநிலைய கடைகள் | 1, 2, 3, 4, 5, 6, 7, 8 ,9, 10, 11 ,12, 13, 14, 15, 16 , 17 ,18, 19, 20,21, 22, 23 ,24, 25 | 3.00 | 10000/– |
| 02 | மார்க்கெட் IUDP வெளிக் கடைகள் | 1, 2, 3, 4, 5, 6, | 1.50 | 10000/– |
| 03 | மார்க்கெட் MLA fund உள்கடைகள். | 1, 2, 3, 4, 5, 6, 7, 8 | 1.00 | 10000/– |
| 04 | மார்க்கெட் MLA fund வெளி கடைகள். | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 | 1.50 | 10000/– |
| 05 | மார்க்கெட் உள்ளே இடதுபுறம் உள்ள 9 ஸ்டால்கள். | 1,2,3,4,5,6,7,8,9 | 0.50 | 10000/– |

மேற்படி கடைகளின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மற்றும் குத்தகை அனுபவ உரிமைக்கு 2018–2019 முதல் 2020–2021 –ம் ஆண்டுக்கான பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

மேற்படி கடைகளுக்கு புதியதாக ஏலம் விடும் பட்சத்தில் சந்தை மதிப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்ததை விட பல மடஙகு வருவாய் கூடுதலாக கிடைக்கும்

பொது ஏலம் நடத்துவதால் தற்போதைய உரிமதாரர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களது வாழ்வதாரம் பாதிக்கப்படும் என்பது சரியல்ல. ஏனெனில் தற்போதைய உரிமதாரரும் ஏலத்தில் பஙகுபெறலாம், பொதுமக்களும் பஙகுபெறலாம். மேலும் பேட்டை சந்தையின் உள்ளே இடது புறம் உள்ள ஸ்டால் கடைகள் 1 முதல் 9 வரை மற்றும் வலது புறத்தில் உள்ள MLA Fund உள் கடைகளுக்கு1 முதல் 8 வரை கொண்டு வரும் பொருட்களுக்கு குத்தகைதாரருக்கு/நகராட்சிக்கு நுழைவு கட்டணம் செலுத்தி கொள்ள வேண்டும்.

ஏலம் கொண்டுவருவதன் மூலம் கடையை நடத்திவருபவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். கடைகாரர்கள் நகராட்சியின்மீது அதிருப்தி ஏற்படும் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தல்ல. குத்தகை உரிமம் என்பது காலவரையரைக்கு உட்பட்டது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். உரிம காலம் முடிவுற்றபின்பு தன்னியல்பாக கடையின் உரிமம் ரத்தாகிவிடும். தாஙகளகவே கடையினை காலிசெய்துவிட வேண்டும் என்பதும் அவர்கள் நன்கு அறிவார்கள். வருவாயினை உயர்த்தும் நடவடிக்கைக்கு பொது மக்கள் மத்தியில் நகராட்சி நிர்வாகத்தின் மீது நன்மதிப்பு ஏற்படும்.

நகராட்சி சொத்து பொதுசொத்து தனிநபர்களே தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள். பொது சொத்தை அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொது ஏலம் நடத்துவது என்பது அனைவரும் பயன்படும் வகையில் சமவாய்ப்பு ஏற்படும். சமூகப்பொருளாதார நீதி நிலை நாட்டப்படுவதுடன், நகராட்சியின் வருவாயினை பெருக்கிட, பொதுமக்களின் அடிப்படை வசதி, அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். நகராட்சி கடைகளை மறுஏலம் விடவும், அஙகாடி மதிப்பு நிர்ணயம் செய்திட நிறைவேற்றப்பட்ட

நகர்மன்ற தீர்மானம் எண், 1052, நாள். 29–04–2017–ஐ ரத்து செய்திடவும், கருத்துரு அரசிற்கு அனுப்பிடவும் மற்றும் விளம்பர மற்றும் இதர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுவதுடன் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்ட உடன் ஒரு ஆண்டுக்கான கடை வாடகை உடன் செலுத்துவதுடன் ஒப்பந்த பத்திரம் எழுதி வழஙகவும் கோர மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1) தற்சமயம் பொது ஏலம் விடும் பட்சத்தில் அதிக வருவாய் பெற வாய்ப்பு உள்ளது. மேலும் பொதுமக்கள் அனைவரும் பஙகேற்க சமவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

2) ஒருவரே தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கு மேலாக கடையை நடத்திக்கொண்டு வருவதால் மற்றவர்களின் நியாயமான வாய்ப்பு பறிக்கப்படுகிறது. தொடர்ந்து குத்தகை உரிமத்தை புதுப்பிக்கும் முறையில் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகிறது.

3) கடை உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் இரத்து செய்யப்படுகிறது.

4) மேற்படி ஏலம் நடக்காவிடில் நிதியிழப்பு ஏற்படும். இதனால் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படும். எனவே பொது ஏலத்தினை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலமும் நடத்திடலாம்.

(ந.க.எண். 180/2018/அ1)

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1374</u>

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/–(எஸ். மூர்த்தி)
தனி அலுவலர் (ம) ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.